# மோசடியில் ஈடுபட்ட ஓட்டுனர், நடத்துனர் கைது

தேனாம்பேட்டை, ஆக. 20–

மெட்ரோ ரயிலில் வேலை வாங்கித் தருவதாக, மோசடியில் ஈடுபட்ட, பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர், கைது செய்யப்பட்டனர்.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த முருகேசன் உள்ளிட்ட மூவர், நேற்று முன்தினம், தேனாம் பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றை அளித்தனர்.

அதில், பெரம்பூரைச் சேர்ந்த அர்ஜுனன், 42, விம்கோ நகரைச் சேர்ந்த மதுரைவீரன், 48, உள்ளிட்ட ஐந்து பேர், மெட்ரோ ரயிலில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, 10.5 லட்சம் ரூபாய் வாங்கினர்.

அதன்பின், வேலை வாங்கி தராமலும், பணத்தை திருப்பித் தராமலும் அலைக்கழித்து வருகின்றனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, புகாரில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், எண்ணூர் பணிமனையில் ஓட்டுனராக பணிபுரிந்து வரும், மதுரைவீரன், நடத்துனராக உள்ள அர்ஜுனன் ஆகியோரை, நேற்று கைது செய்தனர்.

மேலும், தலைமறைவாக உள்ள மூவரை தேடி வருகின்றனர்.